1973 நவம்பர் 24]

சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள் பதவி

***374 வினா—திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நீதித் துறையில் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாக எத்தனை பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

(இ) எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்த பின் நிரந்தரமாக்கப் படுவார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழ்நாடு குற்றவியல் நீதித்துறையில் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாக 77 பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(இ) தமிழ்நாடு குற்றவியல் நீதிபதிகள் அரசிதழ் பதவிற்கு உயர்த்தப்பட்ட பின் அவர்களின் பணிவிதிகள் தற்போது தான் வெளியிடப்பட்டுள்ளன. எனவே தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் ஒப்புதல் பெற்ற பின் தற்காலிகமாக பணி புரியும் குற்றவியல் சார்பு நீதிபதிகளை முதுநிலை வரிசைப்படி நிரந் தரமாக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. சோ அழகர்சாமி: தலைவரவர்களே, எத்தனை ஆண்டுகள் பணி புரிந்தால் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று கேட்கப் பட்டது. இப்போது 77 பேர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட தாகச் சொன்னார்கள். அவர்களில் யாரையாவது நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது இத்தனை ஆண்டுகள் பணிபுரிந்த உடன் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற விதிமுறையை யாவது வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, புதிதாக இந்தப் பதவி கெஜெட்டெட் ஆக்கப்பட்டது. அதன் பின்னால் தான் நிரந்தரமாக்குவதில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஆகவே, சர்வீஸ் கமிஷனை கலந்தாலோசித்து இதில் ஒரு முடிவு செய்யப்படும்.

திரு. எஸ். வடிவேல் : அமைச்சரவர்கள் 70-க்கு மேற்பட்டவர்கள் இந்தப் பதவிக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களில் எத்தனை பேர் ஆதித்திராவிடர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் இல்லை.

திரு. எ. சுவாமிதாஸ் : சார், சப் மாஜிஸ்ட்ரேட்டுகளாகப் பல்லாண்டு காலம் பணியாற்றினாலும் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்று ஒரு குறை இருக்கிறது. ஆகவே, அவர்கள் இத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தால் முன்சீப்பாக பதவி உயர்வு கொடுப்பதற்கு ஏற்ற வகையில் சட்டத்தை திருத்தி அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சப் மாஜிஸ்ட்ரேட் என்பது ஒரு தனி 'கேடர்'. இது ஒரு துர்பாக்கியமான நிலைமைதான்.

'Once a magistrate, always a magistrate and once an accused, always an accused'. என்று ஒரு பழமொழி சொல்வார்கள். ஆனால் அவர்களுக்கு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாக பதவி உயர்வு கொடுக்க சர்வீஸ் கமிஷனில் ஒரு கோட்டா ஒதுக்கப்பட்டு, அதற்கு இண்டர்வியூ நடத்தி, தேர்ந்தெடுக்கிறார்கள். சப்-மாஜிஸ்ட்ரேட், முன்சீப் இந்த இரு பதவிகளையும் ஒரே கேடராக மாற்றிவிட்டால் இந்தப் பிரச்சனை இல்லை. மற்ற சில மாநிலங்களில் அந்த முறை பின்பற்றப்பட்டு வருகிறது. அந்த முறையை இங்கும் கொண்டு வரலாமா என்பதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சப் மாஜிஸ்ட்ரேட், முன்சீப் என்று இரண்டு கேடராக இல்லாமல், நீதித்துறைக்கு நியமனம் செய்யும்போது—சப்-மாஜிஸ்ட்ரேட்டிலிருந்து முன்சீப் பதவிக்கு தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற விதிமுறையைக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த முறை பின்னோக்கிச் செல்வதாக அமைந்துவிடும். ஆகவே, அது நம்முடைய யோசனைக்கு உகந்ததல்ல. இப்போது எஸ்.டி.எம். ஆக இருப்பவர்கள் முன்சீப்பாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

1973 நவம்பர் 24]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : *நிரந்தரமாக்கப்பட்ட சப் மாஜிஸ்ரேட்டுகள் நீண்ட நாள் விடுமுறையில் செல்கின்றபோது அரசாங்கத்தில் பணியாற்றுகின்ற ஒரு சிலரை அந்தப் பணியில் அமர்த்துகிருர்கள். அந்த முறையைத் தவிர்த்து, ஒருசில வழக் கறிஞர்களுக்கு பயிற்சியளித்து, அவர்களில் ஒரு பட்டியல் தயாரித்து, அந்தப் பட்டியலில் இருப்பவர்களையே நியமனம் செய் வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *அரசாங்க உத்தியோகஸ்தர் களில் இந்த வேலைக்குத் தகுதி வாய்ந்தவர்களை—நீதித்துறையில் பணியாற்றுகின்ற சில குவாலிஃபிக்கேஷன் உள்ளவர்களை இந்தப் பணிக்கு நியமிக்கிருர்கள். அதற்கு ஒரு பேனல் தயாரித்து, அந்த பேனலில் இருப்பவர்களைப் பார்த்து, உயர்நீதிமன்றம் இடைக்கால பதவியில் நியமனம் செய்கிறது.*

கைதிகளுக்கு வழங்கப்பெறும் உணவு

***375 வினா—திரு. என். கிட்டப்பா:** *மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—*

(அ) மூன்றும் வகுப்பு கைதிகளுக்கு தினமும் வழங்கப்படும் உணவின் செலவுத்தொகை என்ன?

(இ) எந்த ஆண்டில் இத்தொகை நிர்ணயிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *(அ) & (இ) மூன்றும் வகுப்பு கைதிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய உணவு வகைகளின் அளவு கள்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதே தவிர ஒவ்வொரு கைதிக்கும் எவ்வளவு தொகை செலவிடப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்படவில்லை. சென்னை மத்திய சிறையிலுள்ள மூன்றும் வகுப்பு கைதிகளைத் தவிர இம்மாநிலத்திலுள்ள மற்ற எல்லா மூன்றும் வகுப்பு கைதிகளுக்கும் ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு சராசரி ரூ. 1.35 செலவாகிறது. சத்துணவு வழங்கும் திட்டம் முதல் கட்டமாக சென்னை மத்திய சிறைச்சாலையில் செயல்படுத்தப் படுவதால் அங்கு ஒவ்வொரு மூன்றும் வகுப்பு கைதிக்கும் ஒரு நாளைக்கு சராசரி ரூ. 1.56 செலவாகிறது.*